**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கோத்தகிரி**

**அசல் வழக்கு எண். 10/2019**

***2022 -ம் வருடம் நவம்பர் திங்கள் 03ம் நாள் வியாழக்கிழமை வாதி சாட்சி PW 1 ஆக உதவியாளர் நிலை III திருமதி. P. பானுமதி என்பவரால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.***

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **: சூரியநாராயணன்** | **தொழில்** | **:** |
| **த/பெ** | **:** | **சமயம்** | **:** |
| **கிராமம்** | **:** | **ஜாதி** | **:** |
| **தாலுக்கா** | **:** | **வயது** | **:** |

---

***03.11.2022*** ***சாட்சியின் கையொப்பம்:***

***முதன்மை சாட்சியம்*** **PW1 11.45 Pm to 12.30 Pm**

*1. நான் இந்த வழக்கில் வாதியின் அதிகாரம் பெற்ற முகவர் ஆவேன். எனது தரப்பு நிரூபண வாக்குமூலத்தையும், எனது தரப்பு சான்றாவணங்களையும் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். 08.07.2022ம் தேதி எனது முதல் விசாரணை வாக்குமூலத்தையும், 25.08.2022ஆம் தேதி எனது தரப்பு வா.சா.8 வரையிலான ஆவணங்களையும் குறியீடு செய்துள்ளேன். இன்று எனது தரப்பு சான்றாவணமாக கீழ்கண்ட ஆவணத்தை குறியீடு செய்கிறேன்.*

**ஆவணங்கள் விவரம்**

| வ எண். | தேதி | ஆவணங்கள் விவரம் | | குறியீடு விவரம் |
|---|---|---|---|---|
| ***1*** | ***07.02.2017*** | **வாதியின் பெயரில் உள்ள கிஸ்து ரசீது** | **அசல்** | **வா.சா.ஆ.9** |
| ***2*** | ***31.03.2016*** | **வாதியின் பெயரில் உள்ள கிஸ்து ரசீது** | **அசல்** | **வா.சா.ஆ.10** |

**குறுக்கு விசாரணை**

1. நான் இந்த வழக்கின் வாதி நிஷா நாராயணனின் முகவராகத்தான் சாட்சியம் சொல்கிறேன் என்றால், சரிதான். இந்த சொத்து சம்மந்தமாக வாதிக்கு தெரிந்த அளவுக்கு விபரம் எனக்கு தெரியாதென்றால், சரியல்ல. இந்த வழக்கில் 1974ஆம் வருடம் மாதாகவுடர் குடும்பத்தில் பாகப்பிரிவினை ஏற்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். மேற்படி விவரங்களை எனக்கு யார் சொன்னார்கள் என்றால், போஜராஜன் மற்றும் லீலாவதி சொன்னார்கள். இறந்துபோன மாதா கவுடருக்கு எத்தனை வாரிசுகள் என்றால், 4ஆண் வாரிசுகள், 2 பெண் வாரிசுகள் ஆகும். அவர்களின் பெயர்கள் தெரியுமா என்றால், ஹாலன், கொங்கன், போஜராஜன் ஆகிய மூன்று நபர்களின் பெயர் தான் தெரியும். பெண்கள் பெயர் தெரியுமா என்றால், தெரியாது. இறந்துபோன மாதாகவுடருக்கு 5 ஆண் வாரிசுகள் நான் பொய்யாக 4 ஆண் வாரிசு என்று சொல்கிறேன் என்றால், சரியல்ல.

2. தாவா சொத்தின் பழைய சர்வே எண் தெரியுமா என்றால், 24/1, 24/2, 24/3, 24/4 ஆகும். புதிய சர்வே எண் என்ன என்றால், 608/5 ஆகும். நான் எனது வழக்கில் எந்தெந்த புல எண்ணில் தாவா சொத்ததை வாங்கியதாக சொல்கிறேன் என்றால், 608/5 ல் வாங்கியுள்ளேன். பழைய புல எண் என்ன என்றால், 24/1ல் கண்டுள்ள சொத்தை நான் கிரையம் பெற்றுள்ளேன். 1974 ம் வருடத்தில் பாகப்பிரிவினை மாதாகவுடர் குடும்பத்தில் நடந்ததாக

சொல்லியுள்ளேன், அந்த பாகப்பிரிவினையில் யார்யாருக்கு எந்தெந்த புல எண்ணில் சொத்துக்கள் ஒதுக்கப்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால், 608/1, 608/2, 608/3, 608/4 ஆகிய சர்வே எண்ணில் கண்டுள்ள சொத்துக்கள் கூட்டுப்பட்டாவாக அவரது வாரிசுகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

3. தாவா சொத்தில் விஸ்தீரணம் யாருக்கு ஒதுக்கப்பட்டது என்றால், போஜராஜன் அவர்களுக்கு 67 செண்ட்டுகள் 608/5 ல் ஒதுக்கப்பட்டது. தாவா சொத்தில் யார்யாருக்கு எவ்வளவு விஸ்தீரணம் ஒதுக்கப்பட்டுள்ளது என்று தெளிவாக தெரியுமா என்றால், 2 ஏக்கர் 25 செண்ட்கள் ஒதுக்கப்பட்டு, 50 செண்ட்டுகள் ஹாலனுக்கும், 42 செண்ட்டுகள் கொங்கனுக்கும், 1.33 செண்ட்டுகள் போஜராஜனுக்கும் ஒதுக்கப்பட்டது. ஹாலன் என்பவர் 1983ம் வருடமே 1 ஏக்கர் 25 செண்ட்டை அவரது சகோதரர் தோணன் என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால், தெரியாது. அதே தாவா புல எண்களில் போஜராஜன் 3ஆம் பிரதிவாதியின் கணவரும் மற்ற பிரதிவாதிகளின் தகப்பனாரும் ஆன மத்தி என்பவருக்கு 66 செண்ட் பூமியை கிரையம் பெற்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியும்.

4. அதேபோல் கொங்கன் என்பவருக்கு மத்தி என்பவர் 42 செண்ட் பூமியை கிரையம் கொடுத்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியும். தோணன், கொங்கன், போஜராஜன் ஆகியோர் தாவா புல எண்ணில் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை விட அதிகமான சொத்துக்களை

விற்றுவிட்டார்கள். தாவா புல எண்ணில் அவர்களுக்கு சொத்தே கிடையாது என்றால், சரிதான். எனக்கு மாதாகவுடர் குடும்பத்தில் என்ன நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாதென்றால், சரிதான், எனக்கு சொத்தை விற்றவர்கள் சொல்லிதான் தெரியும். என்னைவிட சொத்தை விற்றவர்களுக்கு தான் அதிக விபரம் தெரியும் என்றால், சரிதான். அவர்களை வழக்கில் ஒரு தரப்பினராக சேர்க்கவில்லை என்றால், சரிதான்.

5. அவர்களை சேர்த்திருந்தால் யார்யாருக்கு எவ்வளவு செண்ட் சொத்துக்கள் மத்திக்கும், இந்த வழக்கின் வாதிகளுக்கும் விற்கப்பட்டது என்று தெளிவாக சொல்லியிருப்பார்கள் என்றால், சரியல்ல. அவர்கள் இந்த வழக்கின் ஒரு முக்கிய தரப்பினர்கள் என்றால், சரியல்ல. எந்தெந்த புல எண்களில் போஜராஜன் மத்திக்கு சொத்துக்கள் விற்றார் என்றால், 608/1, 608/2ஏ, 607/1, 607/2, 607/3 ஆகும். பழைய புல எண்ணில் எந்தெந்த சர்வே எண்ணில் விற்றுள்ளார் என்றால், 24/1, 24/2ஏ ஆகும். போஜராஜன் அவரது மனைவி லீலாவிற்கு தானசெட்டில்மெண்ட் எந்த சர்வே எண்ணில் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால், புதிய சர்வே எண். 608/5 பழைய சர்வே எண் சரியாக தெரியவில்லை. தாவாசொத்தின் ஆவணங்களை சரிபார்த்துதான் தாவா சொத்தை கிரையம் பெற்றோம் என்றால், சரிதான்.

6. என்னென்ன ஆவணங்களை சரிபார்த்தேன் என்றால், எனது வழக்கறிஞர் தான் சரிபார்த்தார். 1974முதலான ஆவணங்களை சரிபார்த்து கிரையம்

பெற்றோம். Exhibit.A3 ஆவணம் தான் போஜராஜன் லீலாவதிக்கு எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் ஆவணம் என்றால், சரிதான். அதில் வடக்கில் மத்தி பாகம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். இந்த வழக்கின் வாதிக்கு லீலாவதி விற்கும் கிரைய பத்திரம் Exhibit.A4 ஆவணத்திலும் வடக்கில் மத்தி பாகம் உள்ளது என்று செக்குபந்தி கண்டுள்ளது என்றால், சரிதான்.

7. Exhibit.A1 ஆவணம் மத்திக்கு போஜராஜன் எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் என்றால், சரிதான். அதன் செக்குபந்தியில் தெற்கில் நஞ்சாகவுடர் பாகம் என்று உள்ளது என்றால், சரிதான். நான் இந்த வழக்கில் எனக்கு சொத்தை விற்ற லீலாவதியின் கணவர் போஜராஜன் மத்திக்கு சொத்தை விற்கும்போது தெற்கில் எனது சொத்தின் மீதி பாகம் என்று தான் காட்டியிருக்க வேண்டும் ஆனால் அப்படி குறிப்பிடவில்லை என்றால், சரிதான். போஜராஜன் குடும்ப பாகப்பிரிவினையில் 1 ஏக்கர் 33 செண்ட் ஒதுக்கப்பட்டிருந்தால் மத்திக்கு எழுதிக்கொடுத்த கிரைய பத்திரத்தில் எனக்கு ஒதுக்கப்பட்ட 1 ஏக்கர் 33 செண்ட்டில் 50 செண்ட்டை விற்கிறேன் என்று எழுதிக்கொடுத்திருப்பார் என்றால், சரியல்ல.

8. அந்த இடத்தில் அவருக்கு வேறு சொத்து இல்லை என்பதால் தான் செக்குபந்தியில் அதைப்பற்றி குறிப்பிடவில்லை என்றால், சரியல்ல. Exhibit.A3 தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் கோத்தகிரி தாலுக்கா நெடுகுளா கிராமம் புல எண் பழைய சர்வே எண். 18/7, 18/16, 23, 24/2, 25/2 புதிய

சர்வே எண்கள். 608/1, 608/2, 608/5, 607/1, 607/2 என்று உள்ளது என்றால், சரிதான். இந்த 67 செண்ட்கள் மேற்கண்ட 5 புல எண்களில் தான் உள்ளது என்றால், சரிதான். Exhibit.A3 கிரைய ஆவணத்தில் 608/5 என்று மட்டும் தான் உள்ளது என்றால், சரிதான்.

9. லீலாவதி எனக்கு எழுதிக்கொடுத்த சர்வே எண். 608/5 ல் சொத்துக்கள் 67 செண்ட்டுகள் இருந்திருந்தால் அவர் கணவர் லீலாவதிக்கு எழுதிக்கொடுத்த ஆவணத்தில் 5 புல எண்கள் குறிப்பிட வேண்டிய அவசியமில்லை என்று சொன்னால், சரியல்ல. தாவா புல எண். 608/5ல் தான் உள்ளதாக எனது வழக்கில் நான் சொல்லியுள்ளேன், ஆனால் அதற்கு இதுவரை பிழை திருத்த பத்திரம் ஏதேனும் போட்டுள்ளோமா என்றால், இல்லை. ஒரு சொத்து விற்பனை செய்யப்படும்போது அவருக்கு எப்படி உரிமை வந்தது என்று குறிப்பிட்டுதான் சொத்தை விற்பார் என்றால் சரிதான். அவ்வாறு குறிப்பிடாமல் சொத்தை விற்றது தவறு என்று சொன்னால், சரியல்ல.

10. லீலாவதிக்கு எப்படி சொத்து வந்தது என்ற விவரமே வா.சா.4 பத்திரத்தில் குறிப்பிடவில்லை என்றால், சரிதான். லீலாவதிக்கு எப்படி உரிமை வந்தது என்று குறிப்பிடாததால் இந்த பத்திரத்தின் படி உரிமை கோர முடியாது என்றால், சரியல்ல. எனது நிரூபண வாக்குமூலத்தில் பழைய புல எண். 18/7, 13 புதிய புல எண்கள் 605/5 ல் 66 செண்டும் ஒதுக்கப்பட்டதை நிரூபிக்க ஆவணம் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. போஜராஜனுக்கு

வாய்மொழியாக 66 செண்ட் ஒதுக்கப்பட்டது, அதை 1996ம் வருடமே மத்திக்கு விற்றுவிட்டார் என்றால், சரிதான். ஆனால் அந்த சொத்து வழக்கு சொத்து இல்லை.

11. 1, 2 பிரதிவாதிகள் நான் ஆவணங்களையே சரிபார்க்காமல் சொத்தை வாங்கியுள்ளேன் என்று சொல்கிறார்கள் என்றால், சரியல்ல. தவறான பத்திரத்தின் அடிப்படையில் 1 ஆம் பிரதிவாதியின் அனுபவத்தை தொந்தரவு செய்கிறேன் என்றால், சரியல்ல. என்னிடம் காட்டப்படும் புகைப்படம் தான் தாவா சொத்து என்றால், சரிதான். அந்த புகைப்படங்கள் குறுந்தகடுடன் குறியீடு செய்யப்படுகிறது. அந்த ஆவணம் பி.வா.சா.1 ஆகும். தேதி இல்லை என்று வாதி தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது. 1ஆம் பிரதிவாதிதான் தாவா சொத்தை அனுபவித்து வருகிறார் என்றால், சரியல்ல. 1ஆம் பிரதிவாதி தாவா சொத்தில் ஒரு செட் அமைத்து வீட்டு வரி ரசீது மற்றும் மின்சாரக்கட்டணம் செலுத்தி வருகிறார் என்றால், தெரியாது.

12. உண்மையாகவே போஜராஜன் 1 ஏக்கர் 33 செண்ட் பாகப்பிரிவினையில் ஒதுக்கியிருந்தால், இந்த வழக்கு தாக்கல் செய்ய எந்த அறுகதையும் இல்லை என்றால், சரியல்ல. எனது பிராதில் 3ம் பக்கத்தில் 8வது பத்தில் 66 செண்ட் பூமி 608/1, 2 மற்றும் 608/5 என்ற விஸ்தீரணத்தில் உள்ளது என்று குறிப்பிடாமல் அனைத்து சர்வே எண்களிலும் இருப்பதாக குறிப்பிட்டுள்ளேனா என்றால், இல்லை. இந்த வழக்கை தவிர 1 மற்றும் 2

பிரதவதிகள் மீது ஏதேனும் நடவடிக்கை எடுத்தேனா என்றால், ஆமாம். காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன். அது சம்மந்தமான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை.

13. எனது பிராதில் சொல்லியுள்ள பத்தி 10ல் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்து தவறானது, நான் எனது பிராதில் சொல்லியுள்ளது உண்மையாக இருக்கும் பட்சத்தில் அதுசம்மந்தமான ஆவணங்களையோ, அந்த சொத்துக்களின் விஸ்தீரனத்தின் அடிப்படையிலோ நீதிமன்றத்தில் ஆவணங்களை தாக்கல் செய்திருப்பேன் என்றால், சரியல்ல. தாவா சொத்து உட்பிரிவு செய்யப்பட்டது தெரியுமா என்றால், தெரியும். அதை ரத்து செய்ய நடிவடிக்கை எடுத்துள்ளோமா என்றால், ஆமாம். அதை நிரூபிக்க ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை.

14. தாவா சொத்தை சரியான ஆவணங்களின் அடிப்படையில் வாங்காமல் கிரையம் பெற்றுள்ளேன் என்றால், சரியல்ல. வழக்கு சொத்து 1ஆம் பிரதிவாதியின் அனுபவத்தில் உள்ளது என்றால், சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால், சரியல்ல.